RNI-N0: TNTAM/2021/83936





# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025





சிவகங்கை மலர்-5 இதழ்- 134 மே.22 2026 வெள்ளிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# தமிழக அமைச்சர்களாக காங். எம்.எல்.ஏ.க்கள் இருவர் உள்பட 23 பேர் பதவியேற்பு

சென்னை: மே.22-

தமிழக அமைச்சர்களாக காங்கிரஸ் கட்சியின் 2 எம்எல்ஏ.,க்கள் உள்பட 23 பேர் இன்று பதவியேற்றனர். அவர்களுக்கு தமிழக ஆளுநர் அர்லேகர் பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

முதலில் வந்தே மாதரம் இசைக்கப்பட்டு பதவியேற்பு விழா தொடங்கியது. விஜய் முதல்வராக பதவியேற்றபோதும் கூட முதலில் வந்தே மாதரம் பின்னர் தேசிய கீதம் தொடர்ந்து தமிழ்த் தாய் வாழ்த்து என்று இசைக்கப்பட்டு அதற்கு கண்டனங்கள் எழுந்தன. இந்நிலையில், இன்றைய பதவியேற்பு நிகழ்ச்சியிலும் முதலில் வந்தே மாதரம் இசைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தமிழக முதல்வராக கடந்த மே.9 ம் தேதி விஜய் பதவியேற்றார். அன்றையதினம் அவருடன் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, அருண்ராஜ், செங்கோட்டையன், வெங்கடராமன், நிர்மல்குமார், ராஜ்மோகன், பிரபு, கீர்த்தனா ஆகிய 9 பேரும் பதவியேற்றனர். சில நாட்களுக்கு முன்னர் அவர்களுக்கான இலாகாகள் ஒதுக்கப்பட்டன.

இந்நிலையில், இன்று அமைச்சர்களாக, 1. ஸ்ரீநாத் தூத்துக்குடி எம்எல்ஏ, 2. எஸ்.கமலி அவிநாசி, 3. சி.விஜயலக்ஷ்மி குமாரபாளையம், 4. ஆர்.வி.ரஞ்சித் குமார் காஞ்சிபுரம், 5. வினோத் கும்பகோணம், 6. ராஜீவி திருவாடானை, 7. பி.ராஜ் குமார் கடலூர், 8. வி.காந்திராஜ் அரக்கோணம், 9. மதன்ராஜ்.பி ஒட்டப்பிடாரம், 10. ஜெகதீஸ்வரி.கே ராஜபாளையம், 11. ராஜேஷ்குமார். எஸ் கிள்ளியூர், 12. விஜய்பாலாஜி.எம் ஈரோடு கிழக்கு, 13. லோகேஷ் தமிழ்செல்வன்.டி ராசிபுரம், 14. விஜய் தமிழன் பார்த்திபன்.ஏ சேலம் தெற்கு, 15. ரமேஷ் ஸ்ரீரங்கம், 16. பி.விஸ்வநாதன் மேலூர், 17. குமார். ஆர் வேளச்சேரி, 18. தென்னரசு.கே ஸ்ரீபெரும்புதூர், 19. சம்பத்குமார்.வி



கோவை வடக்கு, 20. முகமது ஃபர்வாஸ்.ஜே அறந்தாங்கி, 21. டி,சரத்குமார் தாம்பரம், 22. மரிய வில்சன் ராதாகிருஷ்ணன் நகர், 23. விக்னேஷ்.கே கிணத்துக்கடவு ஆகியோர் பதவியேற்றுக் கொண்டனர். இத்துடன் தமிழக அமைச்சரவையில் பலம் 33 ஆக அதிகரித்துள்ளது.

தமிழக அமைச்சரவையில் விசிக, ஐயூஎம்எல் இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அது நடைபெறவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

மேலும், அதிமுகவிலிருந்து பிரிந்து வந்து தவெகவுக்கு ஆதரவு கொடுத்த 25 எம்எல்ஏக்களுக்கு அமைச்சரவையில் இடம் வழங்கினால் ஆதரவை பரிசீலனை செய்வோம் என்று இடதுசாரிகள் எச்சரித்திருந்த நிலையில் அவர்களுக்கு இடம் தரப்படவில்லை.

59 ஆண்டுகளுக்குப் பிறகு: தமிழக அமைச்சரவையில் காங்கிரஸ் எம்எல்ஏ.க்களான செ.ராஜேஷ் குமார், பெ.விஸ்வநாதன் ஆகியோர் அமைச்சர்களாகப் பதவியேற்றுக் கொண்டனர். தமிழக அரசியலில் 59 ஆண்டுகளுக்குப் பின்னர் காங்கிரஸ் ஆட்சியில் அதிகாரம் பெற்றுள்ளது. இது அந்தக் கட்சிக்கு மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்துள்ளது.

இது குறித்து மாணிக்கம் தாகூர் எம்.பி. ”தமிழகத்தை தவிர நாங்கள் கூட்டணியில் இருக்கும் மாநிலங்களில் எல்லாம் ஆட்சியில் பங்கு கொள்வோம். ஆனால், இங்கு மட்டுமே மற்றவர்களின் வெற்றிக்காகப் பாடுபட்டுவிட்டு வெளியில் இருப்போம். தமிழக அமைச்சரவை விரிவாக்கம், எங்களுக்கு ஆட்சியில் பங்கு கொடுத்துள்ளது. இது தமிழகத்தில் எங்களின் ஆதிக்கத்தை மீட்டெடுக்க உதவும். தமிழக மக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கும் வகையில் எங்கள் கட்சியினரும், அமைச்சர்களும் செயல்படுவார்கள்.” என்று தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் எம் எல் ஏ ராஜேஷ்குமார் எஸ் பதவியேற்ற போது முன்னாள் முதல்வர் காமராஜ், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியை புகழ்ந்து கோஷம் எழுப்பினார். அதற்கு ஆளுநர் இது தங்களது உறுதிமொழியின் பகுதி அல்ல என்று உடனடியாக கண்டனம் தெரிவித்தார்.

தவெக ஆட்சிக்கு வரும் முன்னரே தன்னுடன் கூட்டணி அமைக்கும் கட்சிகளுக்கு ஆட்சியில் பங்கு என்று பிரச்சாரம் செய்தது நினைவுகூரத்தக்கது.

மேலும் தமிழக அமைச்சரவையில் 4 பெண் அமைச்சர்கள் இடம்பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## அரசு மருத்துவமனையில் தவெக பிரமுகர்கள் ஆய்வால் சர்ச்சை

தென்காசி, மே.22-

சங்கரன்கோவில் அரசு மருத்துவமனை மற்றும் கடையநல்லூர் அம்மா உணவகத்தில் தவெக நிர்வாகிகள் ஆய்வு செய்தது விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே கல்குவாரியில் வேலை பார்த்த ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த தொழிலாளி ஒருவர் இயந்திரத்தில் சிக்கியதில் அவரது கை துண்டானது. சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார்.

பின்னர், மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்நிலையில், மருத்துவர் போல் வெள்ளை கோட் அணிந்துகொண்டு வந்த தவெக மருத்துவ அணி பெண் பிரமுகர் மற்றும் நிர்வாகிகள் சிலர், சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சென்று இந்த சப்மவம் தொடர்பாக மருத்துவர்களிடம் கேட்டறிந்துள்ளனர்.

மேலும் அவர்கள், பணியில் இருந்த மருத்துவர்களிடம் மருத்துவமனையில் உள்ள வசதிகள், தேவைப்படும் வசதிகள், பணியாளர்கள் விவரங்கள் உள்ளிட்டவை குறித்து கேட்டறிந்துள்ளனர். இதேபோல், கடையநல்லூரில் உள்ள அம்மா உணவகத்தை தவெக நிர்வாகிகள் பார்வையிட்டு, அம்மா உணவகத்தில் உள் கட்டமைப்பு வசதிகள், உபகரணங்கள், குடிநீர் உள்ளிட்டவற்றை ஆய்வு செய்துள்ளனர்.

இந்நிலையில், மக்கள் பிரதிநிதிகளாக இல்லாத கட்சி நிர்வாகிகள் அரசு மருத்துவமனை, அம்மா உணவகத்தில் ஆய்வு செய்தது சர்ச்சையை ஏற்படுத்தியது. அரசு மருத்துவமனை, அம்மா உணவகத்தை கட்சி நிர்வாகிகள் ஆய்வு செய்ய அதிகாரம் அளித்தது யார்? இந்த ஆய்வுக்கு அதிகாரிகள் ஒத்துழைப்பு அளித்தது ஏன்? என்று சமூக வலைதளங்களில் பலரும் விமர்சித்து வருகின்றனர்.

ஆய்வுக்கு சென்றவர்கள் மற்றும் அவர்களை ஆய்வு செய்ய அனுமதித்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

## “தமிழகத்தில் மின்கட்டணத்தை உயர்த்தும் எண்ணம் இல்லை” : அமைச்சர் நிர்மல் குமார்

சென்னை: மே.22-

“தமிழகத்தில் மின்கட்டணத்தை உயர்த்தும் எண்ணம் இல்லை. தவறான தகவல் பரப்பப்பட்டு வருகிறது. மின் வாரியத்தில் ஊழியர் பற்றாக்குறை உள்ளது” என மின்துறை அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, “மின்துறையில் சீரமைக்க வேண்டிய பணிகள் நிறைய உள்ளன. சோலார் பேனல் கொள்முதல் விவகாரத்தில் விதிமுறை மீறல் நடந்துள்ளது. தவறு செய்தவர்கள் முன்னாள் அமைச்சர்களாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும். மின்தடை குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டாலும்



நடவடிக்கை மேற்கொள்ள பணிகள் நடந்து வருகிறது.

டிஎன்பிஎஸ்சி பணி நியமனத்தில் எந்த வித முறைகேடும் நடக்காது. மின்சாரத் துறை இரண்டரை லட்சம் கோடி ரூபாய் கடனில் உள்ளது. அதுமட்டுமல்லாமல் ஊழியர்கள் பற்றாக்குறையும் உள்ளது. இதற்கு முன்னர் இந்த யார் துறையை நிர்வகித்தார்கள் எனத் தெரியும்.

கடந்த ஓராண்டாக, மற்ற ஒப்பந்தப் பணிகளுக்காக தோண்டப்படும் குழிகளில் 160 இடங்களில் பவர் கேபிள்கள் வெட்டப்பட்டுள்ளன.

முதலில் நிர்வாகத்தை சீரமைக்க வேண்டும். டெண்டர் எடுப்பதில் இனி எந்த மறைமுக டீலிங்கும் நடைபெறாது. மின்சார விநியோகத்தை சீராக செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மக்கள் அளிக்கும் புகார்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் மின்கட்டணத்தை உயர்த்தும் எண்ணம் இல்லை. தவறான தகவல் பரப்பப்பட்டு வருகிறது” என்று அவர் தெரிவித்தார்.

## ஆம்னி பேருந்துகளுக்கான சாலை வரியை குறைக்க வேண்டும் : உரிமையாளர்கள் வலியுறுத்தல்

சென்னை: மே.22-

ஆம்னி பேருந்துகளுக்கான சாலை வரியை குறைக்க வேண்டும் என, உரிமையாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். அனைத்து ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் செயற்குழு கூட்டம் சென்னையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சங்கத்தின் தலைவர் அன்பழகன், முக்கிய நிர்வாகிகள் மற்றும் அனைத்து செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை மாநகரின் மையப்பகுதியில், மிகப் பெரிய ஒருங்கிணைந்த பேருந்து நிலையமான கோயம்பேடு பேருந்து நிலையத்தை மீண்டும் ஒரு பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ செயல்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் வாகனங்களை நேரடியாக கண்காணிக்கும் சாதனங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஸ்டிக்கர் ஆகியவை அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன. அரசு தலையிட்டு முறைகேடுகளை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அண்டை மாநிலங்களில் பதிவு செய்யப்பட்டு, ஆல் இந்தியா டூரிஸ்ட் பெர்மிட் பெற்று, மத்திய அரசின் விதிமுறைகளின்படி, வரி செலுத்தி தமிழகத்துக்கு இயக்கப்படும் ஆம்னி பேருந்துகள், நடைமுறையில் மீண்டும் தனியாக மாநில சாலை வரி செலுத்த வேண்டிய அவசியம் இல்லை.

எனவே, இந்த பெர்மிட் உள்ள அண்டை மாநில பேருந்துகளை வழக்கம்போல் தங்கு தடை இன்றி நமது மாநிலத்துக்குள் வந்து செல்லவும், தமிழகப் பேருந்துகள் வெளிமாநிலங்களுக்கு சென்று வரவும் வழிவகை செய்ய வேண்டும்.

தமிழகத்தில் போக்குவரத்து துறையின் பல்வேறு சேவைகள், குறிப்பாக, புதிய வாகன பதிவு, அனுமதி மற்றும் தொடர்புடைய நிர்வாக செயல் முறைகள், அண்டை மாநிலங்களுடன் ஒப்பிடும்போது அதிக கால தாமதம் ஆகிறது. அரசு இதனை பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழக அரசு நடவடிக்கை

தமிழகத்தில் நகரங்களுக்கு இடையே இயக்கப்படும் ஆம்னி பேருந்துகளுக்கு விதிக்கப்படும் சாலை வரி, அண்டை மாநிலங்களுடன் ஒப்பிடும் போது அதிகமாக உள்ளது.

தமிழகத்தில் ஆம்னி பேருந்துகளுக்கு விதிக்கப்படும் சாலை வரியை மறுபரிசீலனை செய்து, குறைக்கும் வகையில் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## “ஐயூஎம்எல் சார்பில் ஏ.எம்.ஷாஜகானை அமைச்சரவையில் சேர்க்க முடிவு” : காதர் மொகிதீன்

சென்னை: மே.22-

தவெக தலைமையிலான அமைச்சரவையில் ஐயூஎம்எல் இடம் பெறும் என்றும், பாபநாசம் தொகுதி எம்எல்ஏ ஏ.எம்.ஷாஜகானை அமைச்சராக சேர்க்க பரிந்துரைத்துள்ளோம் என்றும் அக்கட்சியின் தலைவர் காதர் மொகிதீன் தெரிவித்துள்ளார்.




தவெக தலைமையிலான அரசுக்கு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐயுஎம்எல்)ன் இரண்டு எம்எல்ஏக்கள் ஆதரவு அளித்திருந்தனர். இதையடுத்து, அமைச்சரவையில் ஐயூஎம்எல் இடம்பெற வேண்டும் என்றும், இரண்டு எம்எல்ஏக்களில் ஒருவரை அமைச்சராக்க விரும்புவதாகவும், அந்த ஒருவரை தெரியப்படுத்துமாறும் விஜய் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, இது தொடர்பாக ஆலோசிக்க ஐயூஎம்எல் மாநில நிர்வாகிகளின் அவசரக் கூட்டம் கட்சியின் தேசிய தலைவர் கே.எம். காதர் மொகிதீன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய காதர் மொகிதீன், “இன்றைய கூட்டத்தில் மூன்று முக்கிய செய்திகள் பரிமாறப்பட்டன. தமிழகத்தில் தவெக ஆட்சி உருவாக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஐயூஎம்எல்ன் இரண்டு உறுப்பினர்கள் நிபந்தனையற்ற ஆதரவை தெரிவித்தனர். தற்போது ஆட்சி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆதரவு கொடுத்த நேரத்தில் எந்த நிபந்தனையையும் நாங்கள் வைக்கவில்லை; எந்தக் கோரிக்கையையும் தெரிவிக்கவில்லை.

இருந்தாலும் முதல்வர் ஜோசப் விஜய், பெருந்தன்மையோடு ஐயூஎம்எல்ஐ அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ள முடிவெடுத்திருப்பதாகவும், உங்கள் இரண்டு எம்எல்ஏக்களில் ஒருவரை அமைச்சரவையில் சேர்க்க முடிவெடுத்திருப்பதாகவும், அதற்கு உங்கள் ஒப்புதல் வேண்டும் என்றும் என்னிடம் கேட்டார்.

இது எங்களுக்கு எதிர்பாராத ஒரு செய்தி. நாங்கள் கேட்கவும் இல்லை, கோரிக்கையும் வைக்கவில்லை. இருந்தபோதும், எங்கள் கட்சியை அமைச்சரவையில் சேர்க்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பெருந்தன்மையோடு எங்களை அணுகியதற்காக நாங்கள் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம்.

இதுபற்றி நாங்கள் கலந்து பேசினோம். எங்கள் கட்சியின் அரசியல் ஆலோசனைக் குழுவின் தலைவராக இருப்பவர் கேரளத்தின் தலைவர் சயது சாதிக் அலி ஷியாப்தங்கல். அவர், நபிகள் நாயகத்தின் 38வது வாரிசு. அவரும், கேரள அமைச்சரும் கட்சியின் தேசிய பொதுச் செயலாளருமான குஞ்சாலிகுட்டியும் சேர்ந்து இது தொடர்பான கட்சியின் முடிவை நேற்று அறிவித்தார்கள். அது தொடர்பாக நாங்களும் ஆலோசனை மேற்கொண்டோம். இதில், தவெக தலைமையிலான தமிழக அரசில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கும் இடம்பெறுவதை ஆதரிப்பது என முடிவெடுத்துள்ளோம்.

இன்றைய கூட்டத்தில், ஐயூஎம்எல்ன் இரண்டு எம்எல்ஏக்களுக்கும் அமைச்சரவையில் ஏன் இடம் கேட்கக் கூடாது என்ற கேள்வி முன்வைக்கப்பட்டது. இதற்கு, முதலில் ஒருவரை அமைச்சரவையில் சேர்ப்போம். அதன் பிறகு இரண்டாவது எம்எல்ஏவை அமைச்சரவையில் சேர்ப்பது குறித்து கேட்போம் என முடிவெடுக்கப்பட்டுள்ளது. இருவரில் யாரை அமைச்சரவையில் இடம்பெறச் செய்வது என்பது குறித்த முடிவை எடுக்கும் அதிகாரம் எனக்கு (காதர் மொகிதீன்) வழங்கப்பட்டது. அதன்படி, பாபநாசம் தொகுதி எம்எல்ஏ ஏ.எம்.ஷாஜகானை அமைச்சரவையில் சேர்க்க முடிவெடுத்திருக்கிறோம். கூட்டணி குறித்து தேர்தல் காலத்தில் முடிவு செய்வோம்” என தெரிவித்தார்.

## நீலகிரி மாவட்டம் மு.பாலடா உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளியில் 2026- 2027 ஆம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவிப்பு

உதகை மே,22-

தமிழ்நாடு பழங்குடியினர் நல உண்டி உறைவிட பள்ளி கல்விச் சங்கத்தின் கீழ் செயல்படும் நீலகிரி மாவட்டம் மு.பாலாடா ஏகலைவா மா மாதிரி உண்டி உறைவிடமேல் நிலைப்பள்ளியில் 2026 2027 ஆம் கல்வி ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. இப்பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை ஆங்கிலவழிக் கல்விக்கான மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. மாணவர் மற்றும் மாணவியர் என இருவகை பாலினத்தவரும் விண்ணப்பிக்கலாம். தமிழகத்தில் உள்ள அனைத்து வகையான பழங்குடியினர் மட்டும் விண்ணப்பிக்கலாம். இப்பள்ளியில் மாணவர்கள் மற்றும் மாணவியருக்கு அனைத்து வசதிகளுடன் தனித்தனி விடுதிகள் பள்ளி வளாகத்திலேயே அமைந்துள்ளது. சீருடைகள், பாடப்புத்தகங்கள் உள்ளிட்ட தமிழ்நாடு அரசின் மாணவர்களுக்கான விலையில்லா பொருட்களுடன், விடுதியும் எவ்வித கட்டணமும் இல்லாமல் வழங்கப்படுகிறது. சீர்மிகு வகுப்பறையில் கற்பித்தல் நடைபெறுவதுடன், 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு உயர்கல்விக்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு அரசு செலவில் இந்தியாவில் உள்ள தலைசிறந்த கல்வி நிறுவனங்களில் சேர்க்கப்பட்டு வருகின்றனர். அனைத்து வேலைநாட்களிலும் பள்ளியில் நேரடி மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. மாணவர் சேர்க்கை தொடர்பான விவரங்களுக்கு பள்ளியினை நேரடியாகவோ அல்லது 9443204022 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

## பந்தலூர் பஜாரில் துர்நாற்றம் குப்பைகள் அகற்றாத்தினால் பொதுமக்கள் அவதி



பந்தலூர், மே,22-

நீலகிரி மாவட்டம் பந்தலூர் தாலுக்கா தலைமையிடமாக உள்ளதால் பல்வேறு பகுதிகளில் இருந்து அரசு பணி மற்றும் மருத்துவ தேவைக்கு வந்து செல்கின்றனர். அதுபோல நெல்லியாளம் நகராட்சியின் நகராட்சி அலுவலகம் இங்குதான் செயல்படுகிறது. இந்நிலையில் பந்தலூர் பஜார் பகுதியில் இந்தியன் வங்கி அமைந்துள்ள நகராட்சி வளாகம் பகுதியில் சில நாட்களாக குப்பைகள் குவித்து வைக்கப்பட்டு உள்ளது. குப்பைகள் முறையாக அகற்றப்படாமல் தேங்கி கிடப்பதால் கடும் இந்த பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் அப்பகுதி பொதுமக்கள், கடை நடத்துவோர் மற்றும் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். சாலையோரங்களில் உணவு கழிவுகள், பிளாஸ்டிக் பொருட்கள், வாழை தண்டுகள், காய்கறி கழிவுகள் உள்ளிட்ட குப்பைகள் குவிந்து கிடப்பதால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. குறிப்பாக மழைக்காலம் தொடங்கியுள்ள நிலையில், குப்பைகள் தேங்கியுள்ள பகுதிகளில் கொசு உற்பத்தி அதிகரிக்கும் அபாயமும் உருவாகியுள்ளது.மேலும், பஜார் பகுதிக்கு தினமும் ஏராளமான மக்கள் வருகை தரும் நிலையில், துர்நாற்றம் காரணமாக பொதுமக்கள் முகம் சுளிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. வணிக நிறுவனங்களுக்கும் இதனால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக கடை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். நெல்லியாளம் நகராட்சி அலுவலர்கள் அடிக்கடி செல்லும் இந்த பகுதியில் கிடக்கும் குப்பையை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்காதது பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. நகர பகுதியில் இந்த நிலை என்றால் மற்றபகுதிகளில் என்ன நிலை என்ற கேள்வியும் எழுகிறது. எனவே, சம்பந்தப்பட்ட நெல்லியாளம் நகராட்சி நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுத்து குப்பைகளை அகற்றி, தினசரி தூய்மை பணிகளை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



## வடகரை அரசு ஆதிதிராவிட நல பெண்கள் மேல்நிலைப்பள்ளி 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 96 சதவீதம் தேர்ச்சி

மாதவரம், மே,22-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் வடகரை ஊராட்சி அரசு ஆதிதிராவிட நல பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் மொத்தம் 76 மாணவிகள் தேர்வு எழுதினர். அதில் 96 சதவீதம் பெற்று 73 மாணவிகள் தேர்ச்சி பெற்று உள்ளனர்.451 மதிப்பெண்கள் பெற்று எம்.சசிரேகா முதலிடமும், 446 மதிப்பெண்கள் பெற்று எஸ்.மஞ்சு இரண்டாமிடமும், 439 மதிப்பெண்கள் பெற்று வி.தாரிகா மூன்றாமிடமும் பெற்றுள்ளனர். பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவிகளையும் வெகுவாக பாராட்டி தலைமை ஆசிரியர் வெங்கட்ரவி, உதவி தலைமை ஆசிரியர் (இயற்பியல் முதுநிலை பட்டதாரி) எம்.மாலதி மற்றும் பள்ளி மேலாண்மை குழு நிர்வாகிகள் உள்ளிட்ட ஆசிரியர்கள் வாழ்த்தினர்.



## செங்குன்றம் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 88 சதவீதம் தேர்ச்சி

மாதவரம், மே 22-

மாதவரம் தொகுதி செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சியில் இயங்கி வரும் செங்குன்றம் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் மொத்தம் 73 மாணவர்கள் தேர்வு எழுதினர். அதில் 88 சதவீதம் பெற்று 64 மாணவர்கள் தேர்ச்சி பெற்று உள்ளனர்.451மதிப்பெண்கள் பெற்று பாலு முதலிடமும், 450 மதிப்பெண்கள் பெற்று ரோகித் இரண்டாமிடமும், 443 மதிப்பெண்கள் பெற்று தீனதயாளன் மூன்றாமிடமும் பெற்றுள்ளனர். பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களையும் வெகுவாக பாராட்டி தலைமை ஆசிரியர் சாமிநாதன் உதவி தலைமை ஆசிரியர் மற்றும் பள்ளி மேலாண்மை குழு நிர்வாகிகள் உள்ளிட்ட சகஆசிரியர்கள் வாழ்த்தினர்.

## சீர்மரபினர் நலத்திட்ட உதவிகள் பெற இணைய வழி சேவை

தேனி மே 22-



தமிழ்நாட்டில் உள்ள சீர்மரபினர் பிரிவைச் சேர்ந்த நபர்களின் சமூக, பொருளாதார, மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக அரசால் சீர்மரபினர் நலவாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தில் பதிவு செய்யும் உறுப்பினர்களுக்கு கல்வி உதவித்தொகை (10ஆம் வகுப்பு முதல் ஐ.டி.ஐ பாலிடெக்னிக் படிப்பு மற்றும் தொழில்கல்வி பட்ட படிப்பு), முதியோர் ஓய்வூதியம், இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கிற்கான உதவித்தொகை, கண் கண்ணாடி உதவித்தொகை, விபத்து மரண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, திருமண உதவித்தொகை ஆகிய நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது. இந்நேர்வில் 01.04.2026 முதல் சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர் சேர்க்கை, புதுப்பித்தல் மற்றும் நலத்திட்ட உதவிகள் பரிந்துரை செய்தல் ஆகியவற்றை இணையவழி மூலம் நடைமுறைப்படுத்தும் பொருட்டு தமிழக மின் ஆளுமை முகமை மூலம் இணையவழி சேவை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.எனவே இனிவரும் காலங்களில் 18 வயது பூர்த்தியடைந்த 60 வயதிற்குட்பட்ட சீர்மரபினர் இனத்தை சார்ந்தவர்கள் நலவாரியத்தில் புதியதாக உறுப்பினராக பதிவு செய்வதற்கும், ஏற்கனவே பதிவு பெற்ற உறுப்பினர்கள் தங்களது பதிவினை புதுப்பிப்பதற்கும் மற்றும் மேற்குறிப்பிட்டுள்ள நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கும் https;//www.dncwb.tn.gov.in/ என்ற இணையதளத்தில் சென்று தங்கள் கைப்பேசி எண் மூலம் உள்நுழைந்து உறுப்பினர் சேர்க்கை / நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் தகுந்த சான்றுகளுடன் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் மனுதாரர்கள் இ சேவை முலமாக இணையவழியில் விண்ணப்பம் செய்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், தெரிவித்துள்ளார்.



## வடகரை அரசு ஆதிதிராவிட நல ஆண்கள் மேல் நிலைப்பள்ளி 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 98 சதவீதம் தேர்ச்சி

மாதவரம், மே,22-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் வடகரை ஊராட்சி அரசு ஆதிதிராவிட நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் மொத்தம் 85 மாணவர்கள் தேர்வு எழுதினர். அதில் 85 சதவீதம் பெற்று 83 மாணவர்கள் தேர்ச்சி பெற்று உள்ளனர்.456 மதிப்பெண்கள் பெற்று சேக்அப்துல்ரகீம் முதலிடமும், 431 மதிப்பெண்கள் பெற்று கார்த்தி இரண்டாமிடமும், 414 மதிப்பெண்கள் பெற்று இளமுகிலன் மூன்றாமிடமும் பெற்றுள்ளனர். பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களையும் வெகுவாக பாராட்டி தலைமை ஆசிரியர் கிருஷ்ணன்குட்டி உதவி தலைமை ஆசிரியர் ஜெயபிரியா மற்றும் பள்ளி மேலாண்மை குழு நிர்வாகிகள் உள்ளிட்ட ஆசிரியர்கள் வாழ்த்தினர்.



## விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி

மாதவரம், மே 22-

மாதவரம் தொகுதி சோழவரம் ஊராட்சி ஒன்றியம் நல்லூர் ஊராட்சி சோலையம்மன் நகர் விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் மொத்தம் 70 மாணவ மாணவிகள் தேர்வு எழுதினர். இதில் 100 சதவீதம் பெற்று 70 மாணவமாணவிகளும் தேர்ச்சி பெற்று உள்ளனர். எஸ்.முக்தேஷ் 495 மதிப்பெண்கள் பெற்று முதலிடமும், தே.தீபிகா 487 மதிப்பெண்கள் பெற்று இரண்டாமிடமும், ஐ.திவ்யதர்ஷினி 484 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடமும் வகிக்கின்றனர்.10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவமாணவிகளையும் பள்ளியின் தாளாளர் டாக்டர் மணிவண்ணன், முதன்மை நிர்வாக அதிகாரி அருண்மொழிவர்மன், முதல்வர் செல்வக்குமார், செயலாளர் ஜெயலட்சுமி உள்ளிட்ட ஆசிரிய ஆசிரியைகள் பாராட்டினர்.

## தவெக அமைச்சர்களுக்கு இலாகா ஒதுக்கீடு

சென்னை:மே,22-

தமிழ்நாடு அமைச்சரவையில் புதிதாக இடம்பெற்றுள்ள 23 அமைச்சர்களுக்கு இலாகா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் செங்கோட்டையனுக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. செங்கோட்டையனிடம் இருந்த நிதித்துறை மரிய வில்சனுக்கு மாற்றப்பட்டுள்ளது. மேலும் ஸ்ரீரங்கம் ரமேஷுக்கு அறநிலையத்துறையும் மற்றும் விஜய் பாலாஜிக்கு கைத்தறித்துறையும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் ஆனந்திடம் இருந்த வறுமை ஒழிப்பு துறை முதலமைச்சரிடம் மாற்றப்பட்டுள்ளது. அமைச்சர் விஸ்வநாதனுக்கு உயர்கல்வித் துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

## நிலக்கோட்டையில் இருசக்கர வாகன பழுதுபாப்போர் சங்கத்தினர் மோட்டார் சைக்கிளில் விழிப்புணர்வு பேரணி

நிலக்கோட்டை, மே,22-



திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் மல்லிகை இருசக்கர வாகன பழுது பார்ப்போர் சங்க தலைவர் முருகேசன் தலைமையில் சங்க முதலாம் ஆண்டு நிகழ்ச்சி ஒட்டி தலைக்கவசம் அணிந்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இருசக்கர பேரணியை வத்தலகுண்டு வட்டார மோட்டார் வாகன ஆய்வாளர் சிவக்குமார் கொடியசைத்து துவங்கி வைத்தார்இந்த பேரணி நிலக்கோட்டை பேருந்து நிலையத்திலிருந்து தொடங்கி நிலக்கோட்டை நகர் முழுவதும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக பேரணியாக சென்று தனியார் மண்டபத்தில் முடிவடைந்தது.அதனைத் தொடர்ந்து சங்கத்தின் நிறுவன தலைவர் மறைந்த குப்புசாமி நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. பழுது நீக்குவோர் உரிமையை மீட்டெடுக்கவும், இருசக்கர வாகனங்களுக்கு அதிகளவு சாலை விதி வரி, மற்றும் உபரி பொருட்கள் மீதான வரிகளை மத்திய மாநில அரசுகள் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் , இருசக்கர வாகன பழுது பார்க்கும் ஊழியர்களுக்கு உயிர் காப்பீட்டு திட்டம் வழங்கிட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்தில் செயலாளர் ஜெயச்சந்திரன், பொருளாளர் குமரேசன் மற்றும் சங்க செயற்குழு உறுப்பினர்கள், நிர்வாகிகள், நிலக்கோட்டை, வத்தலகுண்டு, வாடிப்பட்டி, கொடைரோடு, அணைப்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து 200க்கும் மேற்பட்ட இருசக்கர வாகன பழுது பார்ப்போர் உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

## தாராபுரம் பொன்னு மெட்ரிகுலேஷன் பள்ளி 10ஆம் வகுப்பில் மாநில முதலிடம் - 100% தேர்ச்சி சாதனை

திருப்பூர்,மே 22-



திருப்பூர் மாவட்டம், தாராபுரம் உடுமலை சாலையில் அமைந்துள்ள பொன்னு மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில், தேர்வு எழுதிய 257 மாணவ, மாணவியரும் 100 சதவீதம் தேர்ச்சி பெற்று சிறப்பான சாதனை படைத்துள்ளனர். கடந்த 33 ஆண்டுகளாக தொடர்ந்து 100% தேர்ச்சி என்பது இப்பள்ளியின் அடையாளமாக இருந்து வருகிறது.இந்த ஆண்டுத் தேர்வில், மாணவர் எஸ். தரணிஷ் குமார் 500க்கு 498 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் முதலிடத்தையும், பள்ளி முதலிடத்தையும் பெற்றுள்ளார். மாணவர்கள் எஸ். சசி சங்கர், எஸ். ஹரிஷ் ஆகியோர் தலா 496 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடத்தை பெற்றுள்ளனர். மாணவி ஆர். சபரன ஸ்ரீ 495 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடத்தை பிடித்துள்ளார்.மதிப்பெண் விபரங்களில், 19 பேர் 490க்கு மேல், 25 பேர் 480-489, 20 பேர் 470-479, 21 பேர் 460-469, 11 பேர் 450-459 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். மொத்தத் 96 மாணவர்கள் 450க்கு மேற்பட்ட மதிப்பெண்கள் பெற்று சிறப்பித்துள்ளனர். பாடவாரியாகப் பெற்ற மதிப்பெண்கள் பின்வருமாறு: தமிழ் பாடத்தில் 10 பேர் 99, 16 பேர் 98, 13 பேர் 97 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். ஆங்கிலத்தில் 17 பேர் 99, 16 பேர் 98, 15 பேர் 97 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். கணிதத்தில் 14 பேர் 100, 12 பேர் 99, 18 பேர் 98, 13 பேர் 97 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். அறிவியல் பாடத்தில் 24 பேர் 100, 16 பேர் 99, 14 பேர் 98, 9 பேர் 97 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். சமூக அறிவியலில் 8 பேர் 100, 13 பேர் 99, 4 பேர் 98, 10 பேர் 97 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.மேலும், அறிவியல் பாடத்தில் 15 மாணவர்கள் 100க்கு 100 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். 8 மாணவர்கள் இரட்டை சதம் (இரண்டு பாடங்களில் 100), 5 மாணவர்கள் மும்மை சதம் (மூன்று பாடங்களில் 100) பெற்றுள்ளனர்.தேர்ச்சி பெற்ற மாணவர்களை பாராட்டி, பள்ளி நிர்வாகி சுஜாதா பாஸ்கர் நினைவுக்கோப்பைகளை வழங்கினார். முதலிடம் பெற்ற மாணவருக்கு நிர்வாகிகளில் பாலகிருஷ்ணன் பொன்னாடை அணிவித்து கௌரவித்தார். இரண்டாம் இடம் பெற்ற மாணவர்களுக்கு நிர்வாகி ராம்குமார் மோகன் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கினார். மூன்றாம் இடம் பெற்ற மாணவிக்கு பள்ளி முதல்வர் வீரராஜ் வெற்றிக்கோப்பை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களை பாராட்டினர். ஒழுக்கம், தரமான கற்பித்தல், திட்டமிட்ட பயிற்சி தேர்வுகள், தனிப்பட்ட கவனம், பெற்றோர்-ஆசிரியர் ஒருங்கிணைப்பு ஆகியவை இச்சாதனைக்கு காரணம் என பள்ளி நிர்வாகிகள் தெரிவித்தனர். தொடர்ந்து 33 ஆண்டுகளாக 100% தேர்ச்சி வழங்கி வரும் மாணவர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டன.



# பாண்டேஸ்வரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 95.58 சதவீதம் தேர்ச்சி

மாதவரம், மே,22-

மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் ஒன்றியம் பாண்டேஸ்வரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் மொத்தம் 68 மாணவ மாணவிகள் தேர்வு எழுதினர். இதில் 95.58 சதவீதம் பெற்று 65 மாணவமாணவிகளும் தேர்ச்சி பெற்று உள்ளனர். முதல் இடம் கே.தமிழரசி 454 மதிப்பெண்களும் இரண்டாமிடம் ஒய்.சந்திரவர்ஷினி, கே.சுரேகா ஆகியோர் 445 மதிப்பெண்களும், மூன்றாமிடம் எஸ்.நிவேதா 423 மதிப்பெண்களும் பெற்று உள்ளனர். பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவமாணவிகளையும் தலைமை ஆசிரியர் பாரிவளவன், உதவி தலைமை ஆசிரியர், பெற்றோர் ஆசிரியர் கழகம், பள்ளி மேலாண்மை குழு நிர்வாகிகள் உள்ளிட்ட ஆசிரிய ஆசிரியைகள் பாராட்டி வாழ்த்தினர்.



# ஸ்ரீ வக்ரகாளியம்மன் ஆலயத்தில் தீமிதி திருவிழா

மாதவரம், மே.22-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி பவானி நகர் அசோக் தெருவில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ வக்ரகாளியம்மன் ஆலயத்தில் 12ம் ஆண்டு தீமிதி திருவிழா ஆலய ஸ்தாபகர் முத்துராமன், ஆலய தர்மகர்த்தா முக்கேஷ்மாயா, ஆலய நிர்வாக காப்பாளர் ஸ்ரீவைதேகி மற்றும் சதீஷ், நவீன், பாலமுருகன், விக்னேஷ், விஜய், திவாகர் உட்பட கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் பந்தகால் நடுதல், கணபதி ஹோமம், காப்புகட்டுதல், சப்தகன்னிகள் பூஜை, ஸ்ரீபவானி அம்மன் ஆலயத்திலிருந்து பால்குடம் எடுத்தல், அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதிஉலா, அக்னி கப்பறை எடுத்தல், ஆலமரம் ஸ்ரீமுனீஸ்வரர் ஆலயத்திலிருந்து பால்காவடி எடுத்தல், கங்கைநீர் திரட்டுதல் போன்றவை நடைபெற்றது. பின்னர் 100க்கும் மேற்பட்ட காப்பு கட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர். இத்திருவிழாவிற்கு ஆலய பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர். முடிவில் அம்மனுக்கு மஞ்சள்நீராட்டு மற்றும் சுமங்கலி பூஜை நடைபெற்றது.



# சில்ரன்ட்ஸ் பேரடைஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி

செங்குன்றம், மே 22-

மாதவரம் தொகுதி சோழவரம் ஊராட்சி ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி எம்.ஏ. நகர் சில்ரன்ட்ஸ் பேரடைஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் மொத்தம் 149 மாணவ மாணவிகள் தேர்வு எழுதினர். இதில் 100 சதவீதம் பெற்று 149 மாணவமாணவிகளும் தேர்ச்சி பெற்று உள்ளனர்.

கு.கோபிகிருஷ்ணா 496 மதிப்பெண்கள் பெற்று முதலிடமும், ஷ.அப்துல் ரிஹான், கே.முகம்மது இர்பான் ஆகியோர் 493 மதிப்பெண்கள் பெற்று இரண்டாமிடமும், T.M. நிரஞ்சன் 489 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடமும் பெற்றுள்ளனர்.தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவமாணவிகளையும் பள்ளியின் தாளாளர் என்.ராஜன், செயலாளர் விஜயா உள்ளிட்ட ஆசிரிய ஆசிரியைகள் பாராட்டி வாழ்த்தினர்.




# ராணிப்பேட்டை நகராட்சி சார்பில் தூய்மை திருவிழா

ராணிப்பேட்டை மே_22-

ராணிப்பேட்டை மாவட்டம் ராணிப்பேட்டை நகராட்சியில் தூய்மை திருவிழா 2006 முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இந்த விழிப்புணர்வு பேரணியை ராணிப்பேட்டை நகர மன்ற தலைவர் சுஜாதா வினோத் கொடியசைத்து துவக்கி வைத்தார் இதில் நகர மன்ற துணைத் தலைவர் ரமேஷ் கர்ணா நகராட்சி ஆணையாளர் செந்தில் குமார் சுகாதார ஆய்வாளர் முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர். ராணிப்பேட்டை நகராட்சியில் இருந்து துவங்கிய ஊர்வலம் எம் .பி .டி ரோடு நவல்பூர் முத்துக்கடை பேருந்து நிலையம் வழியாக மீண்டும் நகராட்சியை சென்றடைந்தது இதில் நகரை தூய்மையாக வைத்துக் கொள்ளவும் மக்கும் குப்பை மக்கா குப்பை என தரம் பிரித்து தர வேண்டும். சுகாதாரத்தை பேணி காக்க வேண்டும் உள்ளிட்ட பதாகைகளை ஏந்தி தொண்டு நிறுவனத்தை சார்ந்தவர்கள் நகராட்சி பணியாளர்கள் உள்ளிட்ட சுமார் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# முத்தமிழ் கலைகளில் சிறந்து விளங்கும் கலைஞர்கள் விருது பெற விண்ணப்பிக்கலாம்

தேனி,மே,22-

தமிழ்நாட்டின் கலைப் பண்புகளை மேம்படுத்தவும் பாதுகாக்கும் நோக்கிலும் கலைஞர்களின் கலைத்திறனை சிறப்பிக்கும் வகையிலும் கலை பண்பாட்டுத் துறையின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் செயல்படும் மாவட்டக் கலை மன்றங்களின் வாயிலாக ஒவ்வொரு மாவட்டத்திலும் 2002 2003 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் வயயி மற்றும் கலைப்புலமையின் அடிப்படையில் சிறந்த ஐந்து கலைஞர்களுக்கும், 2021 2022 ஆம் ஆண்டு முதல் 15 கலைஞர்களுக்கும் விருதுகள் வழங்கிட அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

அவ்வாணையின்படி இதுவரை தேனி மாவட்டத்தில் 20022003 ஆம் ஆண்டு முதல் 2023 2024 ஆம் ஆண்டு வரையில் 130 கலைஞர்களுக்கு கலை விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில், 2025 2026 ஆம் ஆண்டுக்கான கலை விருதுகள் கலை பண்பாட்டுத் துறையின்




கீழ் இயங்கி வரும் தேனி மாவட்டக் கலை மன்றத்தின் வாயிலாக அம்மாவட்டத்தில் இயல், இசை, நாடகம் முதலிய கலைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கலைகளில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் தேர்வாளர் குழு அமைக்கப்பட்டுள்ளது. எனவே, தேனி மாவட்டத்தைச் சேர்ந்த பாட்டு, பரதநாட்டியம், இராஜா ராணி ஆட்டம், கும்மி, கோலாட்டம், தேவராட்டம், தோல்பாவைக்கூத்து, பொம்மலாட்டம், நையாண்டி மேளம், கரகாட்டம், காவடி, பொய்க்கால் குதிரையாட்டம், மரக்கால் ஆட்டம், கோல்கால் ஆட்டம், கழியல் ஆட்டம், கணியான் கூத்து, ஓவியம், சிற்பம், புலியாட்டம், காளையாட்டம், மயிலாட்டம், ஆழியாட்டம், கைச்சிலம்பாட்டம், சிலம்பாட்டம்(வீரக்கலை) மற்றும் வில்லிசை முதலிய செவ்வியல் கலைகள் நாட்டுப்புறக் கலைகள் என அனைத்து வகை முத்தமிழ் கலைகளில் சிறந்து விளங்கும் கலைஞர்கள் இவ்விருது பெற விண்ணப்பிக்கலாம். கலை விருதுகள் முறையே 18 வயதும் அதற்குட்பட்ட கலைஞர்களுக்கு கலை இளமணி விருதும், 19 முதல் 35 வயதிற்குட்பட்ட கலைஞர்களுக்கு கலை வளர்மணி விருதும், 36 முதல் 50 வயதிற்குட்பட்ட கலைஞர்களுக்கு கலை சுடர்மணி விருதும், 51 முதல் 65 வயதிற்குட்பட்ட கலைஞர்களுக்கு கலை நன்மணி விருதும், 66 வயதிற்கு மேற்பட்ட கலைஞர்களுக்கு கலை முதுமணி விருதும் என்ற நிலைகளில் விருதுகள் வழங்கப்படவுள்ளன. மேலும், வயது மற்றும் கலைப்புலமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் 30 சிறந்த கலைஞர்களுக்கு பொற்கிழி பட்டயம் மற்றும் பொன்னாடையும் வழங்கப்படும்.தேனி மாவட்டத்தில் தேசிய விருதுகள், மாநில விருதுகள் (கலைமாமணி) மற்றும் ஏற்கனவே மாவட்டக் கலை மன்றத்தின் விருதுகளைப் பெற்ற கலைஞர்கள் இவ்விருதிற்கு விண்ணப்பம் செய்யக்கூடாது. இதற்கு முன்னர் மாவட்ட விருதுக்கு விண்ணபித்திருந்த கலைஞர்கள் 20252026 ஆம் ஆண்டு விருது தேர்விற்கு தங்களது ஒப்புதல் வழங்கிட வேண்டும்.தேனி மாவட்டத்தைச் சேர்ந்த தகுதி வாய்ந்த கலைஞர்கள் விருதுகள் பெறுவதற்கான விண்ணப்பத்துடன் வயதுச் சான்று, முகவரிச் சான்று, அடையாள அட்டை, ஆதார் அட்டை, பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம்(3) மற்றும் கலை அனுபவச் சான்றுகளின் நகல்களுடன் (தொலைப்பேசி எண்ணுடன்) உதவி இயக்குநர், மண்டலக் கலை பண்பாட்டு மையம், பாரதி உலா முதல் தெரு, ரேஸ்கோர்ஸ் ரோடு, மதுரை 625002 என்ற முகவரிக்கு 31.05.2026 க்குள் விண்ணப்பிக்க வேண்டும். மேலும்இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு 04522566420, 9500277994, 9842596563 என் ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிந்துக்கொள்ளலாம்என மாவட்டஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத்சிங், தெரிவித்துள்ளார்.

# புகைப்படக் கலைஞர் தர்மலிங்கம் மறைவு "காக்கும் கரங்கள்" திட்டத்தின் மூலம் ரூ.1.50 லட்சம் நிதியுதவி வழங்கல்

கிருஷ்ணகிரி மே,22-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை பகுதியைச் சேர்ந்த நவீன் ஸ்டுடியோ உரிமையாளரும், புகைப்பட மற்றும் வீடியோ துறையில் நீண்டகாலமாக பணியாற்றியவருமான தர்மன் (எ) தர்மலிங்கம் நேற்று இரவு இயற்கை எய்தினார். அவரது மறைவுச் செய்தி புகைப்பட மற்றும் வீடியோ கலைஞர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. அவரது மறைவிற்கு தமிழ்நாடு வீடியோ - போட்டோகிராபர்ஸ் அசோசியேஷன் மாநில மற்றும் மாவட்ட சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் இரங்கல் தெரிவித்தனர். மேலும், அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல்



தெரிவித்து அஞ்சலி செலுத்தினர்.இந்நிலையில், தமிழ்நாடு வீடியோ - போட்டோகிராபர்ஸ் அசோசியேஷன் சார்பில் செயல்பட்டு வரும் குடும்ப நல பாதுகாப்பு நிதித் திட்டமான "காக்கும் கரங்கள்" திட்டத்தின் மூலம், தர்மலிங்கம் அவர்களின் குடும்பத்திற்கு ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான காசோலை வழங்கப்பட்டது.இந்த நிதியுதவியை காக்கும் கரங்கள் அறக்கட்டளை தலைவர் கி.சிவகுமார், மாநில துணைத்தலைவர் T.A.சக்கரவர்த்தி மற்றும் மண்டல 4 செயலாளர் D.சரத் ஆகியோர் குடும்பத்தினரிடம் வழங்கினர்.நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகிகள், ஊத்தங்கரை வட்டார நிர்வாகிகள் மற்றும் சங்க உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு மறைந்த தர்மலிங்கம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

# தவெகவினரின் உலகம் வேறு; நம் உலகம் வேறு முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு

விருதுநகர்:மே,22-

இன்ஸ்டாகிராம் போன்ற சோஷியல் மீடியாக்கள் மூலம் மக்களை, இளைஞர்களை மதிமயக்கி தவெக வாக்குகளை பெற்றிருப்பதாக முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு கூறி இருக்கிறார். விருதுநகரில் நடைபெற்ற திமுக நிர்வாகிகளின் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், தவெகே ஆட்சி ஒரு மாயையினால் உருவாக்கப்பட்டது என்றும், அதை எப்படி சுமூகமாக நடத்துவது என்று தெரியாமல் திக்குமுக்காடி வருவதாகவும் குறிப்பிட்டார்.



நடந்து முடிந்த தேர்தலில் திமுகவின் தோல்வி நிச்சயம் நமக்கு ஒரு படிப்பினை தான் என்றும், மீண்டும் ஸ்டாலின் முதல்வராவார் என்றும் தங்கம் தென்னரசு பேசினார். ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும், தவெகவினர் மாய உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் உலகம் வேறு, நம் உலகம் வேறு டிஜிட்டல் உலகத்தில் பொய்யை திரும்ப திரும்ப சொல்வதால் உண்மையாகும் என நினைக்கின்றனர் என்று விமர்சித்தார். தமிழக வெற்றிக் கழகத்தின் செயல்பாடுகள் மற்றும் அவர்களின் அரசியல் புரிதல் எதார்த்தத்திற்குப் புறம்பாக, ஒரு கற்பனையான உலகத்தில் இருப்பது போல் உள்ளதாகவும் விமர்சித்துள்ளார். அடிக்க அடிக்க எழும்பும் பந்தை போல தான் திமுக எழும்பும் என்றார்

# செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் CSR ஆதரவுடன் நீர்நிலை புனரமைப்பு திட்டம் ஒப்படைப்பு

தாம்பரம் மே,22-

செங்கல்பட்டு மாவட்டம் மதுரப்பாக்கத்தில் சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தின் நிறுவன சமூக பொறுப்பு (CSR) நிதி ஆதரவின் கீழ், எக்ஸ்னோரா இன்டர்நேஷனல் பவுண்டேஷன் செயல்படுத்திய மூலச்சேரி ஏரி புனரமைப்பு பணிகளின் ஒப்படைப்பு விழா செயின்ட் தாமஸ் மவுண்ட் ஒன்றியம், மதுராப்பாக்கம் ஊராட்சிக்குட்பட்ட மூலச்சேரி கிராமத்தில் நடைபெற்றது.இந்த நிகழ்ச்சி காலை 11.00 மணியளவில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் எஸ்.மாலதி ஹெலன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் சரத்குமார், மதுராப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் வேல்முருகன், ஒன்றிய ஊராட்சி கவுன்சிலர் அமுதம் வேல்முருகன், சோழமண்டலம் குழு பிரதிநிதிகள், பரங்கிமலை வடமேற்கு ஒன்றிய செயலாளர் செயல் ச.மணிகண்டன்,








மதுரபாக்கம் ஊராட்சி செயலாளர் எம்.பிரகாஷ், மதுரப்பாக்கம் ஊராட்சி இணைச் செயலாளர் டி.செல்வம், மதுரபாக்கம் ஊராட்சி பொருளாளர் ஏ.ஜான்சன் முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளூர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வரவேற்புரை வழங்கிய எக்ஸ்னோரா இன்டர்நேஷனல் பவுண்டேஷன் தலைவர், இத்திட்டத்திற்கு நிறுவன சமூக பொறுப்பு (சிஷிஸி) நிதி ஆதரவு வழங்கிய சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கும், திட்டம் சிறப்பாக நடைபெற மாவட்ட ஆட்சியர் தலைமையிலான செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகம் வழங்கிய வழிகாட்டல் மற்றும் ஒத்துழைப்பிற்கும், திட்டம் செயல்படுத்தப்பட்ட காலமெங்கும் முழுமையான ஆதரவு வழங்கிய உள்ளூர் மக்களுக்கும் தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்தார்.13.7 ஏக்கர் பரப்பளவு கொண்ட மூலச்சேரி ஏரியில் களைகள் அகற்றுதல், தூர்வாருதல், ஆழப்படுத்துதல் மற்றும் கரை பலப்படுத்துதல் உள்ளிட்ட விரிவான புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பணிகள் மூலம் ஏரியின் சுற்றுச்சூழல் தரமும் நீர்ப்பாதுகாப்பு திறனும் குறிப்பிடத்தக்க அளவில் மேம்படுத்தப்பட்டுள்ளது. ஏரியின் தற்போதைய 12,570 கிலோ லிட்டர் நீர்த்தேக்க திறனுடன் கூடுதலாக 6,900 கிலோ லிட்டர் நீர்த்தேக்க திறன் உயர்த்தப்பட்டுள்ளது.இந்த திட்டம் நிலத்தடி நீர் உயர்வை மேம்படுத்தவும், உள்ளூர் நீர்வளங்களை பாதுகாக்கவும், சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை ஊக்குவிக்கவும் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான எதிர்ப்புத் திறனை வலுப்படுத்தவும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், நிகழ்வின் ஒரு பகுதியாக மரக்கன்றுகள் நடும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு, நீர்நிலையை சுற்றியுள்ள பகுதிகளில் பசுமை வளம் அதிகரிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நிகழ்ச்சியில் உரையாற்றிய மாவட்ட ஆட்சியர், பாரம்பரிய நீர்நிலைகளை பாதுகாக்க நிறுவனங்கள், அரசு துறைகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சமூக அமைப்புகள் இணைந்து செயல்படுவது பாராட்டத்தக்கது என தெரிவித்தார். மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் எதிர்கால தலைமுறைகளின் நீர்வள தேவைகளையும் உறுதி செய்ய, மக்கள் பங்கேற்புடன் கூடிய நீர்ப்பாதுகாப்பு முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.இந்த திட்டம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நீண்டகால நீர்வள மேலாண்மைக்காக நிறுவனங்கள், மாவட்ட நிர்வாகம், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சமூக அமைப்புகள் இணைந்து செயல்பட்ட சிறந்த முன்னுதாரணமாக திகழ்கிறது.



## பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு: மானாமதுரை பாபா மெட்ரிக் பள்ளி 100% தேர்ச்சியுடன் சாதனை!

மானாமதுரை மே,22- சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் செயல்பட்டு வரும் பாபா மெட்ரிக் பள்ளி, இந்த ஆண்டுக்கான பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 100% தேர்ச்சி பெற்று மீண்டும் சாதனை படைத்துள்ளது. கடந்த 32 ஆண்டுகளாக தொடர்ந்து பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் முழு தேர்ச்சியை பெற்று பள்ளி தனது பெருமையை நிலைநிறுத்தி வருகிறது. இந்த ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்வில் பள்ளி மாணவர்கள் சிறப்பான மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிந்துள்ளனர். பள்ளி அளவில் முதலிடம் பெற்ற மாணவர் ஜி. தஷ்வன் பாரத் 485/500 மதிப்பெண்கள் பெற்றார். இரண்டாமிடத்தை ஜி. ஹரிஷ் 484/500 மதிப்பெண்களுடன் பிடித்தார். மூன்றாமிடத்தை M. ஸ்ரீராம் 471/500 மதிப்பெண்களுடன் பெற்றார்.வெற்றி பெற்ற மாணவமாணவிகளுக்கும், அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்த ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கும் பள்ளி நிறுவனர் வி. ராஜேஸ்வரி பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்தார்.இதனையொட்டி பள்ளியில் நடைபெற்ற பாராட்டு விழாவில், பள்ளி தாளாளர் ஸி. கபிலன், பள்ளி நிர்வாகி ஸி. மீனாட்சி மற்றும் பள்ளி முதல்வர் வி. சாரதா ஆகியோர் மாணவர்களுக்கு பொன்னாடை அணிவித்து, கேக் வெட்டி வாழ்த்துகளை தெரிவித்தனர்.

## வார இறுதி நாட்களை முன்னிட்டு 1,680 சிறப்பு பேருந்துகள் இயக்கம்: போக்குவரத்து துறை தகவல்



சென்னை:மே,22- வார இறுதி நாட்களை முன்னிட்டு சென்னையில் இருந்து 1,680 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என, போக்குவரத்து துறை தெரிவித்துள்ளது. இதுகுறித்து, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் மோகன் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: வார விடுமுறை நாட்களை முன்னிட்டு சென்னையிலிருந்து இதர இடங்களுக்கு கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன், கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு இன்று 290 பேருந்துகளும், நாளை 595 பேருந்துகளும், சனிக்கிழமை அன்று 650 பேருந்துகளும், சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஒசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 21ம் தேதி முதல் 23ம் தேதி வரை 120 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாதவரத்திலிருந்து 21ம் தேதி முதல் 23ம் தேதி வரை 25 பேருந்துகளும் மற்றும் பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்து பல்வேறு இடங்களுக்கு 200 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அலுவலர்கள் நியமனம்இந்நிலையில், இந்த வார இறுதியில் இன்று 6,022 பயணிகளும், வெள்ளிக்கிழமை 10,791 பயணிகளும், சனிக்கிழமை 7,761 பயணிகளும் மற்றும் ஞாயிற்றுக்கிழமை அன்று 1,06,450 பயணிகளும் பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துள்ளனர். இச்சிறப்பு பேருந்து இயக்கத்தை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் மாநகராட்சி, மகாத்மா காந்தி சாலையில் இயங்கி வரும் சார்பதிவாளர் அலுவலகத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், ஒசூர் சார் ஆட்சியர் ஆக்ரிதி சேத்தி, மாவட்ட பதிவாளர் மீரமுகதீன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



## ராயக்கோட்டை அருகே பேருந்து கவிழ்ந்து விபத்துகாயமடைந்தவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறிய தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள்

கிருஷ்ணகிரி,மே,22- கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டை அருகே உள்ளஉள்ளுக் குறுக்கை வளைவில், கிருஷ்ணகிரியில் இருந்து தேன்கனிக்கோட்டை நோக்கி சென்ற "சாந்தி" என்ற தனியார் பேருந்து ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 2 பேர் உயிரிழந்ததாகவும், 28 பேர் படுகாயமடைந்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.காயமடைந்தவர்கள் கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.இந்நிலையில், தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில், கட்சித் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தஜோசப் விஜய் ஆணைக்கிணங்கவும், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்தன் உத்தரவின் பேரிலும், கிருஷ்ணகிரி மத்திய மாவட்ட நகர கழக செயலாளர் சசிகுமார் மேற்பார்வையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் காயமடைந்தவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர். மேலும், அவர்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்படும் என உறுதியளித்தனர்.



■ மதுரை அழகர்கோவில் சாலையில் உள்ள அரசு விருந்தினர் மாளிகையில் 2026 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு அறிவியல் தேர்வில் 100க்கு 100 மதிப்பெண்கள் பெற்ற மாணவி வி.அபிஸ்ரீ (வெள்ளிவீதியார் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி) ஏ.அக்ஷயலெட்சுமி (ஈ.வெ.ரா.நாகம்மையார் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி) சமூக அறிவியல் தேர்வில் 100க்கு 100 மதிப்பெண்கள் பெற்ற மாணவன் எஸ்.கௌதமன் (சுந்தரராஜபுரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி) ஆகிய மாணவர்களுக்கு மதுரை மத்திய தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மதார் பதூருதீன் முஸ்தபா பாராட்டி வாழ்த்துகளை தெரிவித்தார்கள் அருகில் கல்வி அலுவலர் மோகன் உடன் உள்ளார்.



■ பாகு மீன் இனப்பெருக்கம் மற்றும் வளர்ப்பு முறைகள் குறித்து கிருஷ்ணகிரி மாவட்டம் பாரூர் வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மையத்தில் வரும் 25 முதல் 27 வரை 3 நாள் இலவச பயிற்சி நடைபெறுகிறது.தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சார்பில் நடைபெறும் இந்த பயிற்சியில் குளம் அமைத்தல், மீன் விதை உற்பத்தி, தீவன மேலாண்மை உள்ளிட்ட நவீன மீன் வளர்ப்பு முறைகள் கற்பிக்கப்பட உள்ளன.மேலும் வெற்றிகரமாக செயல்படும் மீன் பண்ணைகளுக்கும் பயிற்சியாளர்கள் அழைத்து செல்லப்பட உள்ளனர்.விருப்பமுள்ளோர் 8122208148, 90920 86570, 8675858383 என்ற எண்களில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் இ.ஆ.ப., பள்ளிக்கல்வித்துறை சார்பில் 2026 ஆம் ஆண்டு நடைபெற்ற பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற அரசு மற்றும் அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை வழங்கி பாராட்டினார்.

## தொடர் மின்வெட்டு மின்வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்ட மக்கள்

சென்னை:மே,22- திருவொற்றியூர், எண்ணூர், புதுவண்ணாரப்பேட்டை, ராயபுரம் பகுதிகளில் இரவு நேரத்தில் தொடர் மின்வெட்டு என புகார் அளித்துள்ளனர். மின்வெட்டு தொடர்பாக மின்வாரிய ஊழியர்களை தொடர்பு கொண்டால் பேச மறுப்பதாக மக்கள் வேதனை தெரிவித்த நிலையில், இது தொடர்பாக மின்விநியோக பாதிப்பை சரிசெய்யக் கோரி மின்வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்டு பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்



## சிவகங்கையில் சுரங்கத்துறை அதிரடி சோதனை: சட்டவிரோத மணல் லாரி சிக்கியது!

சிவகங்கை, மே.22 சிவகங்கை மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத்துறை துணை இயக்குநரின் அறிவுறுத்தலின் பேரில், உதவி புவியியலாளர் மஞ்சுநாத் மற்றும் தனி வருவாய் ஆய்வாளர் பாலமுருகன் ஆகியோர் மதகுபட்டி பகுதியில் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது, அனுமதி சீட்டு ஏதுமின்றி சட்டவிரோதமாக 3 யூனிட் எம்சாண்ட் (M-Sand) ஏற்றி வந்த TN69 AX 5412 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியை அதிகாரிகள் சந்தேகத்தின் பேரில் நிறுத்தி சோதனை மேற்கொண்டனர்.

சோதனையில், லாரியில் ஏற்றிச் செல்லப்பட்ட எம்சாண்ட் தொடர்பான உரிய ஆவணங்கள் மற்றும் அனுமதி சீட்டுகள் எதுவும் இல்லாதது தெரியவந்தது. இதையடுத்து, சட்டவிரோதமாக கனிம வளங்கள் கடத்தப்பட்டதாக கூறி டிப்பர் லாரியை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

பின்னர், கைப்பற்றப்பட்ட வாகனம் மதகுபட்டி காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சிவகங்கை மாவட்டத்தில் சட்டவிரோத மணல் மற்றும் எம்சாண்ட் கடத்தலை தடுக்க அதிகாரிகள் தொடர்ந்து கண்காணிப்பு மற்றும் அதிரடி சோதனைகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**வருவாய் கோட்டாட்சியர் உட்கோட்ட நிர்வாக நடுவர் (ம) நீதிமன்றம் சிவகங்கை**
**ந.க.ஆ B1/6623/2025**

ரா.ஆறுமுகம்
த/பெ ராமசாமி
க.எண்: 11/21 பெரியார் நகர்
நாட்டரசன்கோட்டை
காளையார்கோவில் வட்டம்...
மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தாயார் கண்ணாத்தாள் ஆச்சி என்பவர்கடந்த 12/06/1981அன்று மேற்படி மனுதாரர் முகவரியில் இறந்ததை பதிவு செய்ய அறியாமையால் தவறிவிட்டார். மேற்படி இறப்பை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 10 தினங்களுக்குள் சிவகங்கை கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவிக்கலாம்

மனுதாரர்
ரா.ஆறுமுகம்
அட்வகேட்
ஏ.செந்தில்நாதன் B.A.B.L
நாட்டரசன் கோட்டை.

## பெட்ரோல், டீசல், விலை உயர்வை கண்டித்து விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆர்ப்பாட்டம்



சென்னை:மே,22- பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலையை உயர்த்தியதை கண்டித்து, விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகள் சென்னையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை உயர்வை கண்டித்து விசிக மற்றும் இடது சாரிகள் கட்சிகள் நேற்று வள்ளலார் நகர் பேருந்து நிலையம் அருகே கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.இதில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம், மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி மாநில செயலாளர் பழ.ஆசைத்தம்பி, விசிக பொதுச்செயலாளர் ரவிக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.போக்குவரத்து, அத்தியாவசிய பொருட்கள் விலை உயர்வுக்கு காரணமான பெட்ரோல், டீசல் விலை உயர்வை கைவிட வேண்டும். உணவகங்கள், சிறு தொழில்கள் மூட காரணமான வணிக சிலிண்டர் விலை உயர்வை கைவிட வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தினர்.ஆர்ப்பாட்டத்துக்கு பின்னர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் பெ.சண்முகம் செய்தியாளர்களிடம் கூறுகையில், ''5 நாட்கள் முன் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்பட்டது.நான்கு நாட்களுக்கு பிறகு விலை மேலும் உயர்த்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே, வணிக சிலிண்டர் விலை உயர்த்தப்பட்டுள்ளது. இதுபோல் சென்று கொண்டிருந்தால் அடுத்த சில நாட்களில் வீட்டு உபயோக சிலிண்டர் விலையும் கடுமையாக உயர்த்தப்படும். வாழ முடியாத நெருக்கடிக்கு மக்களை பாஜக அரசு தள்ளி உள்ளது.பெட்ரோல், டீசல், எரிவாயு என்பது அத்தியாவசியமான பொருள். இதை அனைத்து மக்களுக்கும் குறைவான விலையிலும், தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கவும் பாஜக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றார்.இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் வீரபாண்டியன் தனது உரையில், ''பெட்ரோல், டீசல் எரிவாயு விலை உயர்வுக்கு முழுக்க முழுக்க மத்திய அரசும், பிரதமரும்தான் பொறுப்பு. இந்த நெருக்கடிக்கு மூல காரணம் அமெரிக்காவும், இஸ்ரேலும்தான்.நம் நட்பு நாடு ஈரான் தங்கு தடை இல்லாமல் எரிவாயு கொடுத்து கொண்டிருந்தார்கள். அதன் அதிபரை கொன்று விட்டார்கள். செல்வந்தர்கள் தான் தேசவளங்களை கொள்ளை அடிக்கிறார்கள். பிரதமரின் அறிவுரை வேண்டுகோள் எல்லாம் அந்த பக்கம் திரும்ப வேண்டும். உழைக்கிற மக்கள் பக்கம் அல்ல'' என்று கூறினார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161